தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 171

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: மார்கழி 15உ புதன் (30—12—53) ★ ★ ★ வெளியீடு: மார்கழி 16உ வியாழன் (31—12—53)

நேரு காங்கிரசின் இறுதிக் காவலர்!

ஆச்சாரியார் அஸ்தமன ஆரியத்தின் கடைசிப் பிரதிநிதி!!

—(:)—

வாலியைக் கொன்ற வாரிசு முறையைக் கையாண்டார் சி. ஆர்.! ஆனால் தென்னாட்டு வாலி ஏமாளியல்ல என்பதைக் கண்டார்!

அரசியல் பண்பு அவதூறு சொல்வதல்ல! அறிவுப் பண்புடன் செயல்படுவதே அதன் இயல்பு!

—(:)—

பெத்துநாய்க்கன்பேட்டை வரவேற்புக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் அண்ணதுரை

சென்னை, டிச. 30 -

"நாம் போராட்டம் நடத்தித்தான் வாழ வேண்டியிருப்பவர்களல்ல; சரிந்த சோட்டையிலே முடங்கிக் கிடப்பவர்களுமல்ல; போராட்டம் தேவைப்படும்போது நழுவவிட்டுவிட்டு, பதுங்கிக் கொண்டவர்களுமல்ல; திராவிட முன்னேற்றக் கழகம், களத்திலே இறங்காத வேளையிலே பூந்தோட்டத்திலே உலவும்; அதே நேரத்திலே அங்கே புற்றறை இருப்பதையும், கட்டுவிரியன்கள் படுத்திருப்பதையும் உணரும்! மலர் தரும் மணத்திலே மனதைப் பறிகொடுத்துவிடாது. காரணம், கொள்கை பலம் மிக்கதோர் எந்த விடுதலை இயக்கத்துக்கும், பகைமை நிச்சயம் உண்டு என்று அதற்குத் தெரியும்.

"தூற்றலைக் கண்டு தழும்பேறிவிட்ட கழகம் தி.மு. கழகம். நம் கொள்கைகள் நியாயமானவை. நாம் காட்டுகிற பூகோளப் புள்ளிவிவரங்களும், சரித்திரச் சான்றுகளும் நாமே தீட்டிக்கொண்டதல்ல—கல் வெட்டுகளிலிருந்து எடுத்துக் காட்டியிருக்கிறோம்; இலக்கியச் சான்றுகளை, புதைந்துபோன பொருள்களைத் தோண்டியெடுத்துப் பேச வைத்திருக்கிறோம்; ஆண்ட மன்னர்களின் கோட்டைகளைக் காட்டித்தான், நில வளத்தையும், நீர் வளத்தையும் விளக்கித்தான் வந்திருக்கிறோம். வாழ்ந்த நமது மூதாதையர்களின் வரலாற்றையும், மண் மேடாகிவிட்ட அவர்களின் அரண்மனைகளையும் சுட்டிக்காட்டித்தான் பேசி வருகிறோம். தணியாத ஆசை புகுந்த பிறகு யாராலும் அதை அணைக்க முடியாது. 'மாற்றுக் கட்சியினரின் தூற்றலை ஒரு காதால் வாங்கி, இன்னொரு காதால் விடுங்கள்,' என்று ஆச்சாரியார் அடிக்கடி கூறுவதுபோல நாம், ஏசலையும், பழிச் சொல்லையும் பொருட்படுத்தாது, நடந்து வந்திருக்கிறோம்.

"திராவிடரின் துயர்களைத் துடைக்கவும், சமதர்மக் கொள்கைகள் தழைக்கவும், உலகத்து மற்ற நாடுகளோடு தோழமை கொள்ளவும், திராவிடம் தனிபாகப் பெறவும் பாடுபடும் தி. மு. கழகம், இடைக்கால இன்னல்களை, தன் மீது விழும் இழி மொழிகளை மலர்களாகக் கருதி, அதனைப் புறக்கணித்தே செல்லும்!

"வட நாட்டிலிருந்து நாம் பிரிந்து வாழ—என்னென்ன தேவையோ அத்தனையும் இங்கு உண்டு! மலைவளம் உண்டா-உண்டு; நீர்வளம் உண்டா-உண்டு; கனிப்பொருள் உண்டா-உண்டு; அரணுக்கு வழி உண்டா-உண்டு: இவையத்தனையும்விட, உழைக்க, உடல் உரம் பெற்ற மக்கள் உண்டு; ஆட்சி செய்ய ஆள் உண்டா? நாம் ஆண்ட பரம்பரைதான்! எனவே, தென்னாடு தனித்து ஆள எல்லா வசதிகளும் உண்டு என்று சொல்லிவிட்டோம்—'இல்லை' என்றால், காங்கிரஸ்காரர்கள் மறுக்கட்டும். தென்னாடு வட நாட்டுடன் ஒட்டி இருப்பதால் உள்ள நஷ்டத்தை நாம் சொல்லிவிட்டோம்; இலாபத்தை அவர்கள் சொன்னால் மறுக்கத் தயார்!"

—என்று, 26—12—53-ல், சென்னை, பெத்துநாய்க்கன்பேட்டை 8-வது வட்டம் தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற தலைவர்கள் வரவேற்புக்கூட்டத்தில் நன்றி தெரிவித்துப் பேசுகையில், தோழர் அண்ணதுரை குறிப்பிட்டார்.

(3-ம் பக்கம் பார்க்க)

எங்கள் மருந்துதான் அந்தப் 'புண்'ணை ஆற்ற உதவும்!

★

'அடுப்பிலே விழுந்துவிட்ட முந்திரிக் கொட்டையை எடுத்துத் தின்ன குரங்குக்கு ஆசை; ஆனால், சுடுவதால் தன் கை சுடும் என்று குரங்குக்குத் தெரியும்; எனவே, தனக்கு எதிரே ஓடிய பூனையைப் பிடித்து, அதன் கால்களை அடுப்பிலேவிட்டு, முந்திரிக் கொட்டையை எடுத்து குரங்கு தின்னுமாம்! அதே போல — வடநாடு, தென்னாட்டிலிருந்து வளங்களைக் கொண்டு போக, இங்குள்ள பாரத புத்திரர்களைப் பூனைகளாகக் கருதுகின்றனர் — அவர்கள் ஆனந்தமாகத் தின்கிறார்கள். இவர்களுடைய புண் ஆற, நாங்கள் தானே 'மருந்து' தடவாக வேண்டியிருக்கிறது?"

நாம் வளருகிறோம்—'அவர்' ஆயாசம் கொள்கிறார்!

"நாங்கள் மீண்டும் சிறை செல்லும் நிலைமை ஏற்பட்டாலும் ஏற்படலாம்"

"சோர்வின்றிச் செயலாற்றும் தன்மான வீரர்களாக விளங்குங்கள்"

"எங்கள்மீது ஆச்சாரியாரால் போடப்பட்டுள்ள வழக்கு, நீதிமன்ற விசாரணை நாட்கள் கழிந்தபின், மீண்டும் எடுக்கப்பட்டு, நாங்கள் தண்டிக்கப்படலாம். பெரும்பாலும், இத்தகைய கூட்டங்களை நான், எங்களுக்கு விடைகொடுத்து அனுப்பும் கூட்டங்களாகவே கருதுகிறேன்.

ஆச்சாரியார் எங்கே போனாலும், பட்டணக் கரைகளில் மட்டுமல்ல—பட்டி தொட்டிகளிலேயும், நமக்கு ஆதரவு பெருகியுள்ளதைப் பார்க்கிறார். எனவே, அவருக்கு ஆயாசமும், அருவருப்பும் ஏற்படத்தான் செய்யும்.

'வழக்கின் முடிவு, எங்களுக்கும் பாதகமாயும், அவருக்குச் சாதகமாயும் அமைந்தால், நீங்கள் அதற்காகச் சோர்வுறாமல், தொடர்ந்து இயக்க வேலைகளில் ஈடுபட்டுத் திறம்படக் காரியமாற்றுங்கள்.

"காக்கி உடையணியாத பட்டாளத்தைப்போல், தலை குனியாத் தன்மான வீரர்களாக விளங்குங்கள்! ஆபத்துக்கள் வருகின்ற நேரத்திலே, அதை ஏற்கும் ஆண்மையைக் கொள்ளுங்கள்! மக்களின் உள்ளங்களிலே நமது மறுமலர்ச்சிக் கருத்துக்கள் கொழுந்துவிட்டு எரியச் செய்யுங்கள்!

"கூனி உட்காராதீர்! கால்களை மடக்கிக்கொண்டு, ஆயாசப்படாதீர்!—ஆனால், ஆயாசப்படுங்கள்—'எப்போது, நாமும் அறப்போர்க் களத்திலே போர் வீரனாக உலவும் காலம் வரும்,' என்று!

"பொதுக்கூட்டங்கள் போர்க்களத்திற்குப் போகும் வீரர்களுக்கு ஓர் பயிற்சிக் கூடமாகும். நமது போராட்டங்கள் முடிந்துவிட்டதாக யாரும் நினைக்கவேண்டாம். பெற்ற வெற்றிகளைக் கண்டே, பூரிப்படைவதோடு நின்று விடாதீர்கள்! இனிப்பெறவேண்டிய வெற்றிகளுக்காக உங்களை நீங்கள் தயாராக்கிக் கொள்ளுங்கள்."

★

ஆச்சம்—ஆர்வத்தின் வைரி!

வளரும் ஜனநாயக இயக்கத்திற்கு தியாக உள்ளம் அவசியம் தேவை

"ஒலிபெருக்கியின் 'ஒயர்' அறுந்தவுடன் நீங்கள் அலைவரும் எழுந்தீர்கள்; எங்கே இருக்கிறோம், என்பதை மறந்தீர்கள்; திராவிட நாட்டை மறந்தீர்கள்; ஐயாயிரவர் சிறை சென்ற செங்தேன் செய்தியையும் மறந்தீர்கள்; என்ன நேரிடுமோ நமக்கு, என்று அச்சப்பட்டீர்கள்; அச்சமிருக்கிறவரையிலே, கொள்கையிலே, நிச்சயமாக ஆர்வம் வளராது! உயிருக்கே ஆபத்து, இங்கே வந்தது, என்றாலும், தியாகச் சிந்தையுடன்தான் நாம் எப்போதும் தயாராக இருக்க வேண்டும். உங்களைக் குறை கூறுகிறேன் என்று யாரும் கருத வேண்டாம் ஒலிபெருக்கியிலே குறை என்றால், 'அதைச் சரிப்படுத்த அதற்கென்று வந்துள்ள தோழர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் அதைப் பார்த்துக் கொள்வார்கள்,' என்ற நம்பிக்கை நமக்கிருக்க வேண்டும் அதற்குள்ளே எத்தனைக் குரல்! கரம்! கோபக் கண்கள்! ஒலி பெருக்கி வேலை செய்யவில்லை என்பதற்காக, தங்களையே ஒலிபெருக்கியாக ஆக்கிக் கொள்வதா? இந்த முறை, குறைய வேண்டும். இதனை நான் வலியுறுத்திக் கூறியதற்காக யாரும் வருத்தப்படக்கூடாது. வளருகின்ற ஒரு ஜனநாயகக் கட்சிக்கு இது மிகமிகத் தேவை."

கவர்னர் பதவிகளை நீக்கிவிட வேண்டும்

பிரஜா-சோஷலிஸ்ட் கட்சி முடிவு

புதுடில்லி, டிச. 29—

"எல்லா மாநில கவர்னர் பதவிகளையும் நீக்கிவிடுவதுடன், எல்லா மாநிலங்களிலும் மேல் சபைகளையும் ரத்துசெய்ய வேண்டும்,"

என்ற இரு தீர்மானங்கள் இங்கு நடைபெற்ற பிரஜா—சோஷலிஸ்டு பூர்வாங்க மாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

"இந்தியா முழுவதற்கும் ஜனாதிபதி என்ற ஒரே தலைவர் போதுமென்றும், கவர்னர்கள் வேண்டியதில்லை என்றும், மேல் சபையினால், காரணமான செலவினங்கள் ஏற்படுகிறதென்றும், ஆகவே, அதை ரத்து செய்வது அவசியம் என்றும் தீர்மானங்களில் வற்புறுத்தப்பட்டுள்ளன.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 30—12—1953 புதன்

மின்சார மாயவன்!

“அதோ தெரிகிறதே, வானளாவிய கோபுரம், அது தான் ஏகாம்பரநாதர் கோபுரம்,” என்றான் ஒருவன்!

“அந்தக் காலத்துக் கட்டிட நிபுணர்கள் எப்படித்தான் இவ்வளவு உயர்ந்த கோபுரத்தைக் கட்டி முடித்தார்களோ” என்று கல்விக் கண்கொண்டுள்ள கல்லூரி மாணவன் வியந்து கூறினான்!

“இது என்னடா பிரமாதம்! இது அனைத்தும் சிவனார் திருவருளடா முட்டாளே!” என்றான் சிவநேயச் செல்வன்!

வெவ்வேறு கண்ணோட்டம் கொண்ட இரு இளைஞர்கள் சிவன் கோயிலைக் காணச் சென்றனர். தொலைவிலேயே கோபுரம் தென்பட்டது. ‘சிவன் தந்தது’ என்றான் தேவாரப் பள்ளிப் பயிற்சி மட்டுமே பெற்றுள்ளவன். கோபுரத்தைக் கட்டத் திட்டமிட்ட நிபுணன் மீதும், கட்டிமுடித்த ஊழியர்கள் மீதும் கல்லூரி மாணவன் கருத்தைச் செலுத்தினான்!

கோபுர வாயிலை அணுகினர் இருவரும்; வலது பக்கம் ஐங்கரனைக் கண்டதும் தேவார மாணவன் தலையிலே குட்டிக் கொண்டான்; இது கண்ட கல்லூரி மாணவனும், பெற்றோர்கள் பழக்கத்தால் தானும் தலையில் குட்டிக் கொண்டாலும், ‘பிள்ளையார் பிறந்த கதை’யை விளக்கிக் கூற ஆரம்பித்தான். ‘வாதாபியிலிருந்து பரஞ்சோதியால் இறக்குமதி செய்தது இந்தப் பிள்ளையார்,’ என்று, வரலாற்று உண்மையை உரைத்தான், கல்லூரி மாணவன், உடன் வந்த தேவாரப் பண்ணனுக்கு!

இடதுபக்கம் உள்ள ‘மயிலேறும் பெருமாள்’ இடத்திற்குப் போய், சிலையைக் கண்டதும் கரம் கூப்பித் தொழுதான், தேவார மாணவன்! கல்லூரி மாணவனும் கன்னத்தில் போட்டுக் கொண்டாலும், ‘இரண்டு தாரத்துக்கு இந்தக் கால மணவினைச் சட்டத்தில் இடமில்லை,’ என்று கூட்டுத் தோழனிடம் கூறினான்!

... உள்ளே சென்றனர், மூல லிங்கத்தைக் கண்டனர்; பின்னால் உள்ள மாமரத்தைக் கண்டனர். அதன்கீழ் அமைக்கப்பட்டுள்ள ‘உமையொரு பாகனை’க் கண்டனர். அங்குள்ள கருங்கற் கட்டிடத்தில் பொருத்தப்பட்டுள்ள கருங்கல்லை வழவழப்பாக ஆக்கியுள்ள ஊழியர்களின் திறம் கண்டான் கல்லூரி மாணவன். அவர்களை மனமாரப் பாராட்டினான்!

தேவார மாணவனோ, கல்லின் வழவழப்பையோ, கரடுமுரடான கருங்கல்லை அப்படி மாற்றினவர்களின் நிபுணத்துவத்தையோ கண்டான் இல்லை! வேறு எதையோ கண்டான்! ‘அவனன்றி ஓரணுவும் அசையாது’ என்று கூறிக்கொண்டு, தோழனுடன் வீடு திரும்பிவிட்டான்!

வழிநெடுக காஞ்சி நகர புராணத்தில் சிவஞான அடிகள் கூறியுள்ள பொய்க் கதைகளை எல்லாம் கல்லூரி மாணவனுக்கும் போதித்துக் கொண்டு வந்தான். கல்லூரி மாணவனும் தோழமை கெடக்கூடாதே என்று நினைத்து, தோழனின் கூற்றை செவிமடுத்தான்! நிற்க,

வெகு தொலைவு நடந்துவந்த காரணத்தால் இருவரும் ‘நகர பஸ்’ஸில் ஏறி, வீடு வந்து சேர்ந்தனர்; கல்லூரி மாணவன் கேட்டான்: ‘நமது பிரயாணத்தை இவ்வளவு குறுகிய காலத்திலும், குறைந்த செலவிலும், ஓரளவு சுகமாகவும் கழிக்க உதவியாக இருந்ததே, இந்தப் ‘பஸ்’, இதுபற்றி, ஏதாவது இரண்டு பாட்டுக்கள், காஞ்சி புராணத்திலே இருக்கிறதா?’—என்று, தேவாரப் பற்றுடைய தோழனை!

மௌனம்!

வீட்டுக்குள் நுழைந்ததும், தேவார மாணவன், ‘ஒரே புழுக்கமாக இருக்கிறது,’ என்றான்! சுவற்றிலிருந்த ஒரு ‘சிறு துண்டை’ச் சுழற்றினான். உடனே, தலைக்கு மேல் இருந்த விசிறி சுழல ஆரம்பித்தது! ‘இது பற்றியும் ஏதாவது ‘இரண்டு பண்’ தேவாரத்திலோ, திருவாசகத்திலோ இருக்க நீ கண்டதுண்டா?’ என்றான்!

மௌனம்!

“தேவாரத்தோடு உலகம் முடிந்துவிடவில்லை! தேவாரக் கோட்பாட்டை உடைத்தெறிந்து கொண்டு மனிதன் வளர்ந்ததால்தான், இந்தப் ‘பஸ்’ஸும், இந்த ‘மின்சார விசிறி’யும் மனித குலத்துக்குக் கிடைத்தது. இதை நாமும் பெற, தேவாரம் ஓதுவது மட்டும் போதாது! அந்த கண்ணோடு கொஞ்சம் பூலோகக் கண்ணும் நாம் பெற்றாக வேண்டும்! கண் பெறுகதென்றால், மின்சாரம் தரும் சுகத்தை மட்டும் அனுபவித்துக் கொண்டு, அதைப் பழித்தும் இழித்தும் பேசிக்கொண்டு, ‘வாழ்வாவது மாயம்—மண்ணாவது திண்ணம்,’ என்று, பக்திப் பாசுரம் பாடிக்கொண்டு இருப்பதல்ல! நமது வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும், அந்த மெய்ஞ் ஞானக் கண்ணோட்டம் இருக்கப் பார்த்துக்கொள்ள வேண்டும்,’ என்றான், கல்லூரி மாணவன்!

இந்த, ‘மின்சார மாயவனி’ன் திருவிளையாடல் முழுவதையும் அறிந்து கொள்ள வேண்டுமானால், சென்னை நகரில் இப்பொழுது நடைபெறும் (Park Fair) கண் காட்சியை நாம் ஒவ்வொருவரும் போய் கட்டாயம் பார்த்தாக வேண்டும். அங்கு சென்னை சீனத்துக் கடைத் தெருவில் உள்ள சில பல கடைகள் உள்ளன. பெண்ணொருத்தியை, மின்சாரத்தின் துணையால் மெழுகுபோல் உருகவைத்து எலும்புருவாக்கி, மீண்டும் முந்தையப் பெண்ணுருவாக மாற்றிக் காட்டுவதாக விளம்பரப் படுத்தும் காட்சி, வெறும் புரளி! பார்த்த மாத்திரத்தில் கண்ணுக்குப் புலனாகாத விலக்கண்ணாடியமைப்பினால், துவக்கத்தில் கண்ட பெண்ணை மறைத்து, வேறு ஒரு எலும்புக் கூட்டைக் காட்டி, பணம் பறிக்க எத்தர்கள் செய்யும் தந்திரம் அது. அதில் அறிவு பெறும் ஏற்பாடு ஒன்றுமில்லை. ஒரு ஜாண் வயிற்றை நிரப்ப, எந்தவிதமான பித்தலாட்டத்தையும் செய்ய மனித கூட்டத்திலே சில நரிகுணம் படைத்தவர் உள்ளனர் என்பதையே, அது விளக்கிக் காட்டுகிறது. அக்கிரமமாகப் பணம் பறிக்கும் இந்தக் காட்சியை அல்ல, நாம், மின்சார மாயவன் என்று குறிப்பிட்டது. வீணே, பொதுமக்கள் பணத்தைப் பறிக்கும் ‘காட்சி’யை உடனடியாக அகற்ற கண்காட்சிப் பொறுப்பாளர்கள் முனைய வேண்டியது அவர்கள் கடமையாகும். நிற்க,

விஞ்ஞானப் பேரொளி ஜி. டி. நாயுடு அவர்களின் மின்சார இயல் இயந்திரங்கள், அங்கு, காட்சிக்காக வைக்கப்பட்டிருக்கின்றன. மனிதனுடைய நித்தியப்படி வாழ்க்கைக்கு வேண்டிய இன்றியமையாத, ஒவ்வொரு தேவைக்கும், உற்ற துணையாக உள்ள நுண்ணிய மின்சார இயந்திரங்கள் அங்கு காட்சிப் பொருட்களாக உள்ளன.

நமது பேச்சை உடனே கம்பிகளில் பதிவு செய்வதும், அந்தக் கணமே நாம் கேட்பதும் ஒரு புதுமை! குறைந்த விலையில் சாதாரண தொழிலாளியும் சொந்தத்தில் வாங்கி அனுபவிக்கும், ‘ரேடியோ செட்’டையும் அங்கு காணலாம். அன்னிய நாடுகளை எதிர்நோக்காமலே, உள்நாட்டிலேயே குறைந்த செலவில் ஆக்கிய சிறுசிறு காலங்காட்டிகளையும், அங்கு நாம் காணலாம். அதனை ஆக்கும் சிறுசிறு பொறிகளையும், அவைகள் இயங்குவதையும் பார்க்கலாம். அவ்வளவும் திராவிடத் தயாரிப்பு!

நமது வாழ்க்கைச் சுமையை, தேவாரமும், திவ்யப் பிரபந்தமும் இதுவரை மறைக்கத் தவறிவிட்டதை, வெகு சுலபமாக மின்சாரம் செய்து முடித்திருப்பதை, நீங்களே, உங்கள் கண்ணாலும், கருத்தாலும் காணுவீர்கள்! அவ்வளவு அற்புதங்களையும் செய்துள்ளவன் மனிதன்தான்.

மனிதனிடத்தில் மறைந்து கிடக்கும் ஆற்றல், நன்கு தொழில்படுத்தப்பட்டால், அதன் விளைவு எப்படி எப்படி இருக்கும் என்பதற்கு ‘மின்சார மாயவன்’ நல்லதோர் எடுத்துக்காட்டாகும். இந்த வாய்ப்பைத் தவறவிடாமல், அருள் நெறிக் கூட்டத்தாரும், பகுத்தறிவைப் பழிக்க நம்பி இருக்கும் வக்கிரங்களும், இதைப் போய்க் காண வேண்டும். பகுத்தறிவின் மேன்மையும், மனிதனின் ஆற்றலும் அப்பொழுதுதான் அதுகளுக்குப் புலனாகும்!

பொதுமக்களின் மடமை தொலைய, உருவான வகையில், மக்களுக்குப் பணி புரிந்துவரும் நண்பர் விஞ்ஞானப் பேரொளி ஜி. துரைசாமியார் அவர்களைப் பாராட்டுவதோடும் அழகுடைய ‘மின்சார மாயவனை’, மக்கள் கண்டு பலனடைய வகைசெய்து ஏற்பாடு செய்த காட்சிக் குழுவினருக்கும் நமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அகாலித் தலைவர் ஐவர் கைது

பாடியாலா, டிச. 29—

பஞ்சாப் சாகிப் குருத்துவாரம் சம்பவம் சம்பந்தமாக பெப்சு முன்னாள் பிரதமர் சர்தார் கியான் சிங், ராரேவாலாவின் அந்தரங்கச் செயலாளரான சர்தார் திரிலோசன சிங், பேராசிரியர் குருசேவா சிங், பக்ஷிஸ் சிங், சர்தார் அமரசித் சிங் ஆகிய ஐந்து அகாலித் தலைவர்கள் இன்று காலை கைது செய்யப்பட்டனர்.

மானம் பெரிதென்று 10 பேர் மாண்டனர்

ஈரோடு, டிச. 30—

[illegible] மனைவி, 4 புதல்வர்கள், 4 புதல்விகள் ஆகிய 10 பேர் கொண்ட ஒரு குடும்பத்தினர் தங்கள் வீட்டுக்குள் மாண்டு கிடந்தனர்.

இவர்கள் விஷமுண்டு மாண்டதாகச் சொல்லப்படுகிறது. போலீசார் பரிசோதனை செய்து பார்த்ததில் அந்த வீட்டு நகைகள், கடனுக்காக ஏலம் விடப்போவதாக இருந்தது. அந்தக் குடும்பம் செல்வாக்கான குடும்பம்.

மலேயா சர்க்காரில் இந்தியருக்கு பதவி

கோலாலம்பூர், டிச. 28—

மலேயா சமஷ்டி அரசாங்கம், மேல் சபையில், இந்தியக் கழகத்தைச் சேர்ந்த ஒருவரை நியமிப்பது குறித்து அடுத்த ஜனவரியில் அறிக்கை வெளியாகுமென்று தெரியவருகிறது.

இது குறித்து வெளியிடும் பொழுது, சமஷ்டி அரசாங்கத்தின் மந்திரி சபையில் ஒரு இந்தியருக்கு இடமளிப்பது பற்றியும் குறிப்பிடப்படும் எனத் தெரிகிறது.

பொதுவுடைமைக் கட்சி செயல் முறைகள்

மதுரை, டிச. 29—

‘பொதுவுடைமைக் கட்சியின் சட்டசபை வேலைகள் தொடர்ந்து நீடிக்கும்; கட்சி விரிவுபடுத்தப்பட்டு தொழிற் சங்கக் கிசான் நடவடிக்கைகள் பலப்படுத்தப்படும்.”

என்று, கட்சியின் பொதுக்காரியதரிசியான நம்பூதிரிபாட் இன்று கூறினார்.

இங்கு நடைபெற்ற கட்சி மகாநாட்டின் நடவடிக்கைகள் பற்றி பொதுவுடைமைக் கட்சி ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளது.

ரஷ்யப் பொதுவுடைமைக் கட்சியின் வாழ்த்துச் செய்தி இங்கு வாசித்துக் காட்டப்பட்டது.

இந்தியை, இந்தியாவின் பொதுமொழியாக ஆக்கக்கூடாதென்றும், பல்வேறு மாநிலங்களோடு தொடர்பு கொள்ள வாவது இந்தி மொழிக்கு அக்கறை மளிக்கப்பட வேண்டுமென்ற திருத்தத்தை பரிசீலனைக் கமிட்டி ஒப்புக்கொண்டது.

மேல் சபை துணைத் தலைவர்

சென்னை, டிச 29—

சென்னை மேல் சபையின் துணைத் தலைவராக ஏ. எம். அல்லா பிச்சை இன்று தேர்ந்தெடுக்கப்பட்டார். வேறு யாரும் அல்லா பிச்சைக்கு எதிராக பிரேரிக்கப்படவில்லை.

இம்மாதிரி தேர்தல் நடக்கும் போது அபேட்சகர் பற்றி எதிர்க் கட்சியைக் கலந்தாலோசிப்பது வழக்கமென்றும் இதை எதிர்காலத்தில் சர்க்கார் கட்சி மனதில் கொண்டு நடப்பது அவசியமெனவும் எதிர்க் கட்சித் தலைவரான டாக்டர் ஏ. லட்சுமணசாமி கூறினார்.

புதையல்!

நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் திராவிடத்தின் செல்வச்சுரங்கம். எதிர்காலத்தில் திராவிட நாடு மாபெரும் தொழிலகமாகும் என்பதற்கு நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் ஓர் முன்னறிவிப்பாகும்.

நெய்வேலியைச் சுற்றி நூறு சதுரமைல் பரப்புக்கு பூமிக்கடியில் பழுப்பு நிலக்கரி பரவியிருக்கிறது.

இரண்டு கோடி ஆண்டுகளாக அமிழ்ந்து கிடக்கும் தங்கப் பெட்டகம் என்றுதான் இந்த நிலக்கரிச் சுரங்கத்தை என்ஜினீயர்கள் குறிப்பிடுகிறார்கள்.

சுரங்க வேலையை வெற்றிகரமாக முடிக்க 90 லட்ச ரூபாய் செலவில் திட்டவேலை நடத்தப்பட்டு வருகிறது. இதில் 200 கோடி டன் நிலக்கரி கிடைக்கப் பெறும் என மதிப்பிட்டுக் கூறப்படுகிறது.

இதிலிருந்து கிடைக்கும் பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தினால், கரி, தார், எண்ணெய், மெழுகு, பீங்கான்மண், முதலியன கிடைக்குமாம்.

கிடைக்கும் தாரின் இன்றைய விலை டன் ரூ 400; கிடைக்கும் எண்ணெயிலிருந்து பெட்ரோல் உற்பத்தி செய்யலாம். இங்கு கிடைக்கும் மெழுகு, டன் ரூ. 1000 இந்த மெழுகு மின்சாரத் தொழிலுக்குப் பெரிதும் பயன்படும்.

பழுப்பு நிலக்கரியை மூடி இருப்பது [illegible] பீங்கான் மண். இதைக் கொண்டு பல்வேறு சாமான்கள் செய்யலாம்.

அருகாமையில் சேலம் மலைகளில இரும்புக் கனி கிடைக்கிறது. இரும்பு உற்பத்திக்கு இந்நிலக்கரியை பயன்படுத்திக் கொள்ளலாம். இனிமேற்கொண்டு சிமிட்டித் தொழிலுக்கான நிலக்கரியை வேறு யாரிடமும் திராவிடம் எதிர்பார்க்காது.

நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தால் திராவிடர்கள் இழந்த ‘அந்த வாழ்வு’ மீண்டும் கிடைக்கப் பெறும் என்பது நூற்றுக்கு நூறு மெய்யாகும்.

பிள்ளையோ, பிள்ளை!

அம்மையப்பன், டிச. 24—

கரூர் வெள்ளைப் பிள்ளையார் கோயில் தெருவில் வசித்துவந்த மாணிக்கம் பிள்ளையும், அவர் மனைவி கண்ணம்மாளும் ஒரு வயதுக் குழந்தையுடன் வேலை தேடி புறப்பட்டார்கள். எங்கும் வேலை கிடைக்காமல் போகவே, பட்டினியால் நான்கு மாதங்களுக்கு முன்பு மாணிக்கம் பிள்ளை இறந்துவிட்டார். கண்ணம்மாள் கைக் குழந்தையுடன் வேலை தேடி அலைந்தும், கைக் குழந்தையிருப்பதால் வேலை கொடுக்க மறுத்து விட்டார்கள். சில நாள் பிச்சை எடுத்து வளர்த்து, அதுவும் கிடைக்காமல் தன் நிலைமை எப்படியானாலும், பிள்ளை எங்காவது வளரட்டும் என்று நினைத்த தாய், தன் ஒரே வயதுக் குழந்தையை 24—12—53ல், இவ்வூரில், விலை கூறவே, அந்தக் குழந்தையை அஜீமதீன் சாகிப் என்பவர் ஒரு ரூபாயைக் கண்ணம்மாளிடம் கொடுத்துவிட்டுக் குழந்தையை வாங்கி வளர்க்கின்றார். குழந்தையின் தாய் வேலை தேடி எங்கோ சென்றுவிட்டதாகத் தெரிகிறது. (ந.-நி.)

அரிசி ரயில் சூறை!

இருவர் கைது

விசாகை, டிச. 29—

விசாகப்பட்டினத்திற்கு அருகில் அரிசி கொண்டு சென்ற ரயில் ஒன்று கொள்ளையடிக்கப்பட்டது. போலீசார் இதை பொட்டி அப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அண்ணதுரை பேச்சு முழு விவரம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"இந்தப் பெத்துநாயக்கன் பேட்டை, என் பிரியத்திற்குரிய இடம். நீண்ட காலம் நான் இங்கு பல கட்சித் தோழர்களோடு பழகியிருக்கிறேன். அது மட்டுமல்ல; முதன் முதல் இந்தி எதிர்ப்பினைத் துவக்கியபோது, நமது தாய்மார்கள் இந்த இடத்திலிருந்துதான் ஊர்வலம் புறப்பட்டனர். அந்த நாள் முதற்கொண்டு இந்த நாள் வரையிலும் நமது கூடாரமாக இந்தப் பேட்டை இருப்பது கண்டு நான் மிக மிக மகிழ்ச்சியடைகிறேன். எனக்குத் தோழமையும், பழமையும், வலிவும் இந்த இடத்தில் இருப்பதால் மட்டுமல்ல இந்தப் பேட்டை, நிச்சயமாக திராவிடரின் வரலாற்றிலே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும்.

"வைதிகத் திருமணங்களிலே, 'கட்டுக் கிழத்திகள் தான், கலியாணப் பெண்ணுக்கு நலங்கிட வேண்டும்; அதற்கு அவர்கள்தான் தகுதி,' என்பர். அப்படிப் பார்த்தால், என்னை வரவேற்று, பாராட்டி, மலர்மாலை சூட்டிய தோழர் பாலசுந்தரமும் எங்களோடு சிறைக்கு வந்தவர்தான்! கட்டுக்கிழத்தி கலியாணப் பெண்ணுக்கு நலங்கிட்டதுபோல, சிறைசென்று உரம் பெற்ற அவர் எங்களை வரவேற்றார்! கூடுமானவரை, இப்படித்தான் பாராட்டு முறை இயக்கத்திலே வளர வேண்டும்.

"ஒருவனுக்கு இரண்டு மனைவி என்று வைத்துக் கொள்ளுங்கள்—முதல் மனைவியோ மலடி; இரண்டாவது மனைவிக்கு குழந்தை பிறந்து அதைத் தொட்டிலிலே போட்டு ஆட்டுகிறபொழுது முதல் மனைவி தூர இருந்து, குழந்தையைக் கொடூரக் கண்ணோடு பார்த்தால்—எவருக்கும் சந்தேகம் பிறக்கத்தான் செய்யும். நல்லவேளையாக நமது திராவிட முன்னேற்றக் கழகக் குழந்தையை தருமாம்பாள் அம்மையார் தாலாட்ட, அனியா போன்றவர்கள் பாட, கலைவாணர் எம். ஜி. ராமச்சந்திரன், ராமசாமி போன்றவர்கள் களிப்பூட்ட, தி. மு. கழகம் துள்ளி விளையாடும் பிள்ளைப் பருவத்தை அடைந்திருக்கிறது. பிள்ளைப் பருவம்—வளருகின்ற கோத்திலேதான் தன்னடக்கம் வேண்டும். அந்தத்திலே ஆர்வமும், ஆத்திரமும் இந்த வயதிலேதான் அரும்பும்.

"நாம்வசைகளைத் தாங்கும் அளவுக்கு உள்ள உறுதி பெற வேண்டும். இன்று மட்டுமா நமக்கு வசை? சுயமரியாதை இயக்கத்திலே பெரியார் இராமசாமி எவ்வளவு வசைகளைத் தாங்கியிருக்கிறார்? திராவிடர் கழகமாக இருக்கும்போது நாம், எவ்வளவு வசைகளை வாங்கிக் கொண்டோம்? ஒரு அரசியல் கட்சியை, ஒரு தனி மனிதனை எவ்வளவு வசை பாட முடியுமோ, அவ்வளவையும் நம்மீது பாடிவிட்டார் பெரியார்.

"பெரியார் காங்கிரசிலே இருந்து விலகி, சுயமரியாதை இயக்கம் துவக்கியபோது, 'பார்! பார்! பணத்தைத் திருடிக்கொண்டு போய்விட்டார்—காங்கிரசிலே இருந்து; அதை மறைக்க, ஒரு கட்சி ஆரம்பிக்கிறார்,' என்று வசை பாடினார்கள்.

"பெரியார், முஸ்லீம்களை ஆதரித்துப் பேசியபோதும், 'முஸ்லீம்களிடத்திலே பணம் வாங்கிக்கொண்டு இப்படிப் பேசுகிறார்,' என்று வசைபாடினார்கள்.

"திருத்துவரையும், நாடார்களையும், ஆதித் திராவிடர்களையும் திராவிடரோடு இணைத்துப் பெரியார் பேசியபோதெல்லாம், 'பணம் வாங்கிக் கொண்டே இப்படியெல்லாம் பேசுகிறார்,' என்றார்கள். ஆனால், பெரியாரோ சமயம் நேர்ந்த போதெல்லாம் நம்மைப் பழித்துப் பேசுகிறார்.

"ஆச்சாரியார் ஆரம்பத்தில் சொன்ன தன்னுடைய வர்ணாசிரம புதிய கல்வித் திட்டத்தை, இப்போது கைவிட்டு இருக்கிறார்.

"டால்மியாபுரத்தில்,சென்ற நான்கு மாதமாக நாம் ஓட்டி வரும் கல்லக்குடி, 'கல்லக்குடி' யாகவே காட்சியளித்து வருகிறது—'டால்மியாபுரம்' மறைந்து வந்துள்ளது என்று பொருள்! எனவே, எடுத்த காரியத்தில் வெற்றிபெற்றே வந்திருக்கிறோம்.

"திராவிடர் கழகத்திலே இருந்து நாம் பிரிந்துவிட்டோம்; ம. பொ. சி. மற்றொரு பக்கத்திலே ஒய்ந்து விட்டார்; திராவிடர் இயக்கமே தூங்கும் வேளை;—இதுதான் நல்ல சமயம், வர்ணாசிரமக் கல்வித் திட்டத்தைப் புகுத்த--என்று ஆச்சாரியார் கருதினார்;—குறட்டைவிட்டுவீட்டுக்காரன் தூங்கும்போது, கள்ளன் உள்ளே நுழைவதுபோல!

"மரத்தில் ஒளிந்திருந்து அந்தக்காலத்து வாலியைக் கொன்ற பரம்பரை முறையை நம்பித்தான் ஆச்சாரியார் நம்மிடையே வர்ணாசிரமக் கல்வித் திட்டத்தைப் புகுத்தினார்; ஆனால், இந்தக் காலத்து வாலி ஏமாளியல்ல—கண்விழித்துக் கொண்டுதான் இருக்கிறான்!

"ஒரு உதாரணம் சொல்வேன்—காமராஜர்—ஆச்சாரியாருக்குப் பிடிக்கவில்லை; ஆச்சாரியார் காமராஜருக்குப் பிடிக்கவில்லை! பேட்டைகள் இரண்டாகவில்லையா? காங்கிரசுக்குள்ளே இரண்டு கோஷ்டிகள் கிளம்பவில்லையா? திராவிடர் கழகத்திலே இருந்து தி. மு. கழகம் பிரிந்து ஐந்து ஆண்டுகள் ஆகிறது. நம்மீது பெரியார் வீசாத தூற்றல் இல்லை; வலிக்காத வம்புகள் இல்லை. இதற்குப் பிறகும் நமக்குள்ளே ஒரு மோதுதல் உண்டா? பாடம் தெரிந்து கொள்ளுங்கள்.

"மைசூர் காடுகளிலே யானை பிடிக்கப் போனவன், தன் வழியே புனுகுப்பூனை போவதுகண்டு,உடனே தான் யானைமீது வீச இருந்த அம்பை பூனைமீது வீசமாட்டான்!

நான் இந்தப் பேட்டையில், ஒருபோது நகரசபைத் தேர்தலுக்கு நின்றபோது, நண்பர் நடராசன் எனக்கு எதிரிடையாகத்தான் வேலை செய்தார். இன்று, நம்மோடு கலந்து பணியாற்றுகிறார். எனவே, நமது பணி, யார் உள்ளத்தையும் புண்படுத்தாது—மாறாகப் புனிதமாக்கும்.

"ஓட்டு எடுப்பு அன்று, நான், எனக்கு எதிராக நின்ற தோழர் செங்கல்வராயன் வீட்டிலே 'காபி' சாப்பிட்டுவிட்டுத்தான் 'போலிங்' பூத்துக்குச் சென்றேன்!—இதைக் கண்டு சிலர், சாகசம் என்றனர்; தந்திரமென்றனர்;—சாகசமும் அல்ல; தந்திரமுமல்ல; நான் கண்ட நீண்ட கால அரசியல் நாகரிகம்.

"சர்ச்சில், தான் பேசும் கூட்டத்தில் அட்லியைப் பற்றியோ, அட்லி, பேசும்போது சர்ச்சிலை குறைகூறி பேசியோ—அல்லது ட்ரூமன் பேசும்போது ஐசனோவரை இழித்து கூறியோ, ஐசனோவர் பேசும்போது ட்ரூமனைத் திட்டியதாகவோ நீங்கள் படித்திருக்கிறீர்களா?

"ஒருவர் அரசியல் திட்டத்தை வைத்தால், மற்றொருவர், கல்ல, தன் திட்டத்தை வைக்கிறார் — பொதுமக்கள் கேட்கிறார்கள்; முடிவு எடுக்கிறார்கள்; இதுதானே முறையுங்கூட!

"இதை விடுத்து, 'அண்ணாதுரை ஐந்தடி 2 அங்குலம்; இராமநாதபுரம் இராஜா ஆறு அடி உயரமானவர்; நேரு உலக சரித்திரம் எழுதினார்; அண்ணாதுரை ரோமாபுரி ராணிதானே எழுதினார்,' என்கிறார்கள். பொதுமக்களுக்கு இதுவா முக்கியம்?

"நாங்கள் கூறுகிறோம்—உங்கள் ஆட்சியிலே பொதுமக்களுக்கு நன்மை இல்லை' என்று — நீ விளக்கம் தா — 'இன்னின்ன செய்தோம்; தி. மு. கழகத்தால் விளைந்த தீமைகள் இவை' — என்று! இது அல்லவா பொதுமக்களுக்கு வேண்டிய பிரச்னை? தி. மு. கழகத் திட்டத்திலே இங்கே ஓட்டை, உடைச்சல், சொத்தை, சோடை என்று கண்டுபிடித்துச் சொல்! அரசியல் அறிவு வேண்டாமா? அரசியல் என்றால் தனிப்பட்டவர்களின் தரத்தை ஆராய்வதல்ல—ஒரு கட்சி, இன்னொரு கட்சியின் கொள்கைகளை அலசிக் கூறுவதற்கே!

"'திராவிட நாடு திராவிடருக்கே ஆகவேண்டும்;' என்று நித்தம் நித்தம் உரத்தக் குரலிலே பேசுகிறீர்களே; இது அடாது; கூடாது' என்கின்றனர்.

"காங்கிரஸ் நண்பர்களைக் கேட்கிறேன்—இங்குதான் நாங்கள் கிளர்ச்சியை நடத்துகிறோம் என்றால், இந்தியாவில் எங்கே அமைதி இருக்கிறது?

"வங்காளம், மணிபூர் சமஸ்தானம தனி நாடு கிளர்ச்சி நடத்தியதற்காக சிறையிலே அதன் தலைவர்கள் தள்ளப்பட்டனரே!

"காட்டு மிராண்டிகள்—மண்டை ஓடுகளைக் கட்டி கழுத்திலே மாலையாகப் போட்டுக்கொண்டு திரியும் நாகர்கள் — இப்போது 'நாகர் நாடு நாகருக்கே,' என்று கேட்கவில்லையா?

"பாகிஸ்தானுக்குள்ளே — பட்டானிஸ்தான் — பிரச்சினை கிளம்பியுள்ளதே!"

"ஈரான், ஈராக், தனியாக இல்லையா?

"பூகோளத்தைப் பிரித்து, தயவுசெய்து உங்கள் விரலாலே கோடிட்டுப் பாருங்கள்—பிரான்சுக்குப் பக்கத்திலே இருக்கிற ஜெர்மனி ஏன், பிரான்சுடன் ஒன்று சேர்ந்திருக்கக் கூடாது? பிளவு ஏன்? பிரிவினை ஏன்? அவர்கள் என்ன, எங்களைப்போல 'குறுகிய மனப்பான்மை' உடையவர்களா?

சுவிட்சர்லாந்து - நம் கோயமுத்தூர் ஜில்லாவைவிடச் சிறியது! நாம்கேள் நாடும், வட ஆற்காடு ஜில்லாவைவிடச் சிறியதுதான்! அவைகளெல்லாம் தனித்து ஆளும்போது,இங்கே மட்டும், 'இமயம் முதல் குமரி வரை ஒரே நாடு' என்பானேன்?

"இந்தியா, ஒரே நாடு ஒரே நாடு,' என்றால், என்று அது, அப்படி இருந்தது? இராமன் காலத்திலாவது இருந்ததா? அயோத்தி ஒரு ஆட்சியின் கீழ்; மிதிலை, கிஷ்கிந்தை, தண்டாரண்யம்—அங்கேயே எத்தனை பிரிவுகள்? சேரர், சோழர், பாண்டியர், இங்கே! இலங்கையிலே இராவணன் ஆட்சி! இராமனாவது சொன்னரா—இந்தியாவும், இலங்கையும் ஒன்றாக இருக்கட்டும் என்று!

"இரும்புப் பெட்டி அங்கே; அதிகாரமும் அங்கே என்றால், கொடுமைகள் மட்டும் இங்கே என்பது, என்ன நீதி?

"அலகாபாத் புகழ் அகில உலகிலும் பரவியிருக்கிறது; அப்பேர்ப்பட்ட நேருவிடமிருந்தா பிரிவது—என்று காங்கிரஸ் நண்பர்கள் குறைபடுகின்றனர்; என்ன செய்வது? எவ்வளவு பெரிய விளக்காக இருந்தாலும் காற்றில் அணையத்தான் அணைகிறது; காலை சூரியன், மாலை மறையத்தான் செய்கிறது. நேருவுக்குப் பின் காங்கிரசிலே தலைவர் யார்?—பட்ஜே சொன்னால் கேட்பார்களா? மகாவீரர், முகர்ஜீ, அபுல்கலாம் ஆசாத்—யாரேனும் அந்தப் பதவியிலே அமர்ந்தால் ஒப்புவார்களா? ராஜேந்திர பிரசாத்தே வந்தாலும் ஏற்பார்களா?

"நேரு, இதோ நடந்த அருகே இருக்கும் காசி விசுவநாதர் கோவில் கோபுரத்தின் மேலுள்ள விளக்கு போல; விளக்கு அணைந்தால், பெரிய கோபுரமே இருள்பெறும். எனவே, 'அங்கே' மறுவிளக்கு இல்லை. நேருவுக்குப் பின், எப்படி காங்கிரசிலே ஆள் இல்லையோ, அதேபோல ஆச்சாரியாருக்குப் பின், பார்ப்பன சமுதாயத்துக்குப் பாடுபட யாரும் இல்லை."

"தென்னாட்டிலே, வறுமை உச்ச நிலையிலுள்ளது! நெற்றி வியர்வை நிலத்தில் விழ பாடுபட்டும்,ஏழைக்கு உணவில்லை; வசதியில்லை; வாழ்வில்லை என்ற கொடுமை! வட நாட்டிலோ, அமெரிக்காவும்--ரஷ்யாவும் பொறுமைப்படும் அளவுக்கு வளமும்-வாழ்வும் உள்ளது! தேஷ்முக் - டாட்டா - கோயங்கா - பிர்லா - டால்மியாக்கள் அங்கேதான்! மென்சிலின் ஆராய்ச்சி, காகிதத் தொழிற்சாலைகள் அங்கேதான்! ஆனால், தென்னாட்டிலே காந்தி சேவா சங்கம்! குடிசைத் தொழில் அபிவிருத்திக் கழகம்;—இந்தப் பொருளாதார உயர்வு-தாழ்வு நாட்டுடன்—தென்னாடு இணைந்திருப்பதா[illegible]?

இங்கு முதலில்!—அங்கு பிறகு!

★

"நமது திராவிட நாடு குறிக்கோள் தமிழ் நாட்டிலே வெற்றி பெற்ற பிறகு, கேரளத்திலே கால்கோல் விழா நடத்தப்படும். ஆந்திரத்திலே புகுந்த பிறகு, கன்னடத்திலே நிச்சயம் நுழையத்தான் போகிறோம்."

★

ஏஜண்டு நண்பர்களுக்கும், வாசகத் தோழர்களுக்கும் முக்கிய அறிவிப்பு

'நம் நாடு' அச்சகத்திலுள்ள யந்திரத்தில் ஏற்பட்ட கோளாறினால், உள்ளூர் டிச. 28, 29—வெளியூர் டிச. 29, 30 ஆகிய தேதி இதழ்கள் அன்றன்றே அனுப்ப முடியாமற்போய்விட்டது. தாமதத்திற்கு ஏஜண்டு நண்பர்களும், வாசகத் தோழர்களும், சந்தாதாரர்களும் பொறுத்துக்கொள்ள வேண்டுகிறோம்.

நிர்வாகி, 'நம் நாடு'

லால்குடி நடராசன் படத் திறப்பு விழா

2—1—54 சனிக்கிழமை காலை 9 மணிக்கு, கல்லக்குடி போராட்டத்தில் உயிர் நீத்த தோழர் நடராசன் படத் திறப்பு விழா, லால்குடி, தியாகராஜா டாக்கீசில், நடைபெறும்.

அன்று மாலை, தோழர் ஏ. பி. தர்மலிங்கம் தலைமையில், தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. கருணநிதி, ஈ.வெ.கி. சம்பத் ஆகியோர் பேசுவர்.

அனுதாபப் பொதுக்கூட்டம்

"ஆச்சாரியார் புதிய கல்வித் திட்ட எதிர்ப்பில் தம் தோழரோடு, சென்னை மறியலில் கலந்துகொண்டு சிறை புகுந்தவரும், எனது கணவருமான தோழர் எம். விநாயகம் அவர்கள், 22-11-53-ல் இயற்கை எய்தியதைமுன்னிட்டு, வடாற்காடு மாவட்டம், சங்கராமல்லூர் கிராமத்தில், 31-12-53 வியாழன் இரவு 7 மணிக்கு, தோழர் இரா. நெடுஞ்செழியன் பேசுவார்" என்று பார்வதவர்த்தனி அம்மாள் அறிவிக்கிறார்.

திருச்சி மாவட்டக் கிளைக் கழகத் தோழர்களுக்கு

"3-1-54 அன்று, வேலூரில், காந்தியாரின் சிலை திறப்பு விழாவில், தோழர் அண்ணதுரை கலந்துகொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டபடியால், திருச்சியில், 3—1—54 அன்று நடைபெறுவதாகயிருந்த ஐவர் வரவேற்புப் பாராட்டுப் பொதுக் கூட்டத்தை, 10—1—54 அன்று வைக்கப்பட்டுள்ளது. ஆகவே, மாவட்டத்திலுள்ள கிளைக் கழகத் தோழர்களை, வரவேற்பு சிறப்புற நடைபெற ஒத்துழைக்குமாறு வேண்டிக் கொள்ளுகிறேன்," என, திருச்சி மாவட்டச் செயலாளர் தோழர் ஏ. பி. தர்மலிங்கம் தெரிவித்துக்கொள்ளுகிறார்.

பம்பாய், டிச. 29—

பம்பாய் அருகில் இன்று காலை இரண்டு ரயில் வண்டிகள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டதின் விளைவாக 47 பிரயாணிகள் காயமடைந்ததாகத் தெரிகிறது.

விபத்தின் காரணமாக "டெக்கான் ராணி' ரெயிலின் எஞ்சின் சேதமடைந்துவிட்டது.

தானே இயங்கும் கைகாட்டி வேலை செய்யத் தவறியதே விபத்துக்குக் காரணமென்று சொல்லப்படுகிறது.

தூத்துக்குடி வழக்கு நிதிக்கு ரூபாய் 100-9-9

திருவொற்றியூரில் பொதுக்கூட்டமும் கலைவளர்ச்சி மன்றத் துவக்க விழாவும்

சென்னை, டிச. 28—

24—12—53 வியாழன் மாலை 6 மணிக்கு தோழர் எம் கணபதி தலைமையில், திருவொற்றியூரில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி, கே. எம். கண்ணபிரான் ஆகியோர் கூட்டத்திற்கு வருகையில் வழியில், [illegible] முன்னேற்ற [illegible] இரவு பள்ளியின் சார்பில், மாலையிட்டு வரவேற்கப்பட்டனர்.

பின்னர், பொதுக்கூட்டத்தில், தோழர் நெடுஞ்செழியன் அவர்களுக்கு மாலைகள் சூட்டி கைத்தறி ஆண்டிகள் வழங்கி வாழ்த்திதழும் வாசித்தளிக்கப்பட்டது. அதன் பின், தூத்துக்குடி நிதிக்காக ரூ. 100—9—9 அவரிடம் கொடுக்கப்பட்டது.

பின்னர், தோழர் கே. ஆர். ராமசாமி அவர்கள், மன்றத்தைத் துவக்கி வைத்துப் பேசுகையில், ஏழ்மையையும் — ஏகபோக வாழ்க்கையையும்; எண்ணங்களையும்— எதேச்சாதிகாரத்தையும், நாடகங்கள் மூலம் மக்களுக்கு விளக்கிக் காண்பிக்க, இம்மாதிரியான மன்றங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்கள்.

பின்னர், தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், நன்றி தெரிவித்துப் பேசுகையில், இந்நாட்டினையும், மேலை நாட்டினையும் சுட்டிக்காட்டி, எதிர்கால மார்க்கெட்டிலும் நமது குடிசைத் தொழில் பொருள்கள் விற்பனையாக முடியாத நிலைமையைச் சுட்டிக்காட்டினார். பின்னர், அண்மையில் நடைபெற்ற கழகப் போராட்டங்களை; புதிய கல்வித் திட்டத்தின் ஊழல், திராவிடநாடு பிரியும் எல்லை ஆகியவற்றைக்கெல்லாம் விளக்கம் தந்து, நீண்டநேரம் சொற்பொழிவாற்றினார்.

பின்னர், தோழர் தி. கோ. சக்கரபாணி நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

[illegible] நகர் கோயில் இராமச்சந்திரனும் இடக்கப்பட்டன [illegible].

பலதார மணத் தடை

நாடுமுழுதும் ஒரே கொள்கை

புதுடெல்லி, டிச. 28 —

முதல் மனைவி உயிருடனிருக்கையில், சர்க்கார் அதிகாரிகள் மறுமணம் செய்துகொள்ளுவதை தடை விதிக்கும் பொருட்டு, இந்திய சர்க்கார் பரிசீலித்து வருவதாகத் தெரிகிறது.

அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் மாநிலப் பிரதம செயலாளர்கள் மகாநாட்டில் இவ்விஷயம் எடுத்துக்கொள்ளப்படும் எனக் கூறப்படுகிறது.

ஆனால் பலதாரமணத் தடை பற்றிய கட்டுப்பாடு, மாநிலம் முழுதும் ஒரே மாதிரியாக இருக்கவேண்டுமெனக் கருதப்படுகிறது.

பீகாரில் பெண்கள் போலீஸ் படை

பாட்னா, டிச 29—

பீகாரில், பெண்கள் போலீஸ் படை திறமையாக வேலை செய்து வருகிறது; [illegible] முக்கியமாக [illegible] சேவை செய்து வருகின்றனர்; இவர்கள் செகண்டரி கல்வி பயின்றவர்கள்.

சீனக் கலைஞர்களுக்கு சென்னையில் வரவேற்பு

சென்னை, டிச. 29—

நேற்று மாலை, திருவல்லிக்கேணி கடற்கரையில் சென்னை கலாச்சார நிலையங்களின் ஆதரவில், சென்னை வந்துள்ள சீன கலாச்சார தூதுக் குழுவினருக்கு ஒரு வரவேற்பு நடைபெற்றது. கூட்டத்திற்கு தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் டி வி. சுந்தரம் தலைமை வகித்தார்.

முதலில், முன்னாள் மேயர் டி. செங்கல்வராயன் தூதுக் குழுவினரை வரவேற்றுப் பேசினார்.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் ஆகியோர் பேசிய பின், தூதுக்குழுத் தலைவர் டின்-சி-லின் வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், 'புராதன கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்தது தமிழ் நாடு' என்றார்.

மின்சார நிலைய அதிகரிப்பு

சென்னை, டிச. 28—

இன்று காலை மேல் சபையில், முதல் மந்திரி ஆச்சாரியார், 1953—54ம் ஆண்டு, பின் ஆறு மாத வரவு—செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துப் பேசுகையில், கிருஷ்ணகிரி, சாத்தனூர் திட்டங்களுக்கு திட்டக் குழு இணங்கி விட்டதெனவும், அத்திட்டங்களை அரசாங்கம் மேலும் பரிசீலிக்கலாமென்றும் கூறி, செலவினங்களை விளக்கிச் சொன்னார்.

பெரியாறு நீர் மின்சாரத் திட்டத்தையும், சென்னை மின்சார நிலைய விஸ்தரிப்புத் திட்டத்தையும் மேற்கொள்ளவும் திட்டக் குழு அங்கீகரித்துள்ளதாகவும் ஆச்சாரியார் தெரிவித்தார்.

பெரும் நீர் சாதனங்கள் தீர்ந்துவிட்டனவென்றும், இனி சிறு திட்டங்களில்தான் கவனம் செலுத்த வேண்டுமென்றும், சிறு திட்டங்களால் பயனடைவோர் பண உதவி செய்யவேண்டுமென்றும் அவர் சொன்னார்.

இந்து மாதர்களுக்குக் கன்னிகை மடம்

கங்கை நதிதீரத்தில் கட்டப்படுமோம்!

சென்னை, டிச. 29—

இந்துதேச சரித்திரத்திலேயே முதன்முதலாக கங்கை ஆற்றின் தீரத்திலுள்ள கல்கத்தா 'தக்ஷிணேஸ்வர்' என்ற இடத்தில, ஆறு ஏகரா நிலத்தில், அடுத்த ஆண்டில், இந்து மாதர்களுக்கென்று ஒரு கன்னிகை மடம் கட்டப்படும்.

ராமகிருஷ்ணா மிஷன் ஆதரவில் எழுப்பப்படும் இக்கட்டடத்திற்கு ஓர் அமெரிக்க மாது, ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை அளித்திருக்கிறார்.

மகுடமிழந்தவர் மனைவியையும் இழந்தார்

கெய்ரோ, டிச. 28—

எகிப்திய முன்னாள் மன்னர் பருக்கிடமிருந்து முன்னாள் அரசி நாரிமன், விவாக ரத்து செய்துகொள்ளப் போதிய காரணங்கள் இருப்பதாக முஸ்லீம் மத நீதிமன்றம் இன்று முடிவு செய்தது.

விவாகரத்தை நாரிமன் கோரியிருந்தார்; அவர், ஏற்கனவே பருக்கிடமிருந்து விலகி விட்டார்.

திரு—கொச்சி நிர்வாகம்

டில்லியின் கைக்கு மாறுமா?

புதுடில்லி, டிச. 27—

திருவாங்கூர்— கொச்சி மாநிலத்தில் பொதுத் தேர்தல் ஆரம்பமாகு முன்பு, அந்த மாநிலத்தின் நிர்வாகத்தை டில்லி பீடம் ஏற்றுக்கொள்ளுமெனத் தெரியவருகிறது.

தேர்தலில் அபேட்சகராக நிற்போர், நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யும் கடைசி நாள் ஜன. 6-ம் தேதியாகும்.

டில்லி பீடம், இந்த மாநிலத்தை மேற்கொள்ளும் விபரம் ஜன. 8-ம் தேதிக்குள் வெளியாகி விடுமென சொல்லப்படுகிறது.

கயானாவில் இடைக்கால சர்க்கார்

ஜார்ஜ் டவுன், டிச. 27—

பிரிட்டிஷ் கயானாவில் ஒரு இடைக்கால சர்க்காரை பிரிட்டிஷ் கவர்னர் இன்று நியமித்தார்.

10 பேர் கொண்ட நிர்வாகக் கவுன்சில், 27 பேர் கொண்ட சட்டசபை ஆகியவை சேர்ந்ததே இந்த இடைக்கால சர்க்கார்.

பதவியிலிருந்து விலக்கப்பட்ட மக்கள் முன்னேற்றக் கட்சியின் ஆதரவாளர் எவரும் இந்த இடைக்கால சர்க்காரில் சேரவில்லை.

பண முதலைகளே இந்த சர்க்காரின் ஆதரவாளர்கள் என்று சொல்லப்படுகிறது.

தோழியர் ஜகனுக்கு அபராதம்

ஜார்ஜ்டவுன், டிச. 28—

பதவியிலிருந்து விலக்கப்பட்ட பிரிட்டிஷ் கயானாவின் பிரதமர் ஜெட்டி ஜகனின் மனைவிக்கு இன்று ரூ. 675 (250 டாலர்) அபராதம் விதிக்கப்பட்டது. கட்டத் தவறினால் மூன்று மாத சிறை யென்றும் தீர்ப்பில் கூறப்பட்டது.

மற்றும் 9 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

மூதுகிழவர் முசாதிக்

மறு விசாரணை

தெஹ்ரான், டிச. 28—

அடுத்த வாரம் இராணுவப் பிரிவு நீதிமன்றத்தின் முன், டாக்டர் முசாதிக் ஆஜராக்கப்படுவாரெனத் தெரிகிறது.

'மரண தண்டனை விதிக்காவிடில், நான் விடப்போவதில்லை' என்று சர்க்கார் வக்கீல் கூறியது நினைவிருக்கலாம்.

திராவிடர் பகுத்தறிவு மன்றம்

20—12—53-ல், திருப்பரங்குன்றம் திராவிடர் பகுத்தறிவு மன்றத்தின் செயற்குழு கூட்டம், தோழர் சி. மாதவன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, மன்றத்தின் சார்பில் பொங்கல் விழாவை சிறப்பாகக் கொண்டாடுவதென்றும், அன்று திராவிடர் பகுத்தறிவு மன்ற திறப்பு விழாவும் நடத்துவதென்றும், விழாவிற்கு சிறந்த பேச்சாளர்களை அழைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

மாதர்கள் ஆர்ப்பாட்டம்!

ஜகர்த்தா, டிச. 29—

இந்தோனேஷியாவில், பாலிய விவாகம் தடுக்கப்படவேண்டுமென்றும், மாதர் நலன் சம்பந்தமாக சில சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்றும், [illegible] மாதர்கள் பார்லிமெண்ட் முன்பு கூடி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இலங்கை தி. மு. கழகம்

20—12—53-ல், அவிசாவெல்லை தி. மு. க. கிளைக் கழக கூட்டம், கழகப் பணி மனையில், தோழர் எ. ஜெபராஜ் தலைமையில் நடைபெற்றது. தூத்துக்குடி வழக்கு சம்பந்தமாய் நிதி கொடுத்துதவிய தோழர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து, செயலாளர் என். ஆர். பாண்டியன் சொற்பொழிவாற்றினார்.

பின்னர் கழக வரவு-செலவு கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டது. தூத்துக்குடி வழக்கு நிதிக்காக ரூபாய் 51 கொடுக்கவேண்டுமெனவும், தூத்துக்குடி வழக்கை வாபஸ் பெற வேண்டுமெனவும் சென்னை அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

குறும்பேரியில் தி.மு.கழக திறப்பு விழா

திருப்பத்தூரை அடுத்த குறும்பேரியில் 22—12—53ல், தி. மு. கழகத் திறப்பு விழா, தோழர் ஏ எஸ். சி. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் ஏ. மாரப்பன் செயலாளராகவும், நரசிம்மன் துணைச் செயலாளராகவும், மற்றும் 11 பேர்களடங்கிய நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அன்று மாலை 6 மணிக்கு நடந்த பொதுக்கூட்டத்திற்கு தோழர் மு. அண்ணாமலை தலைமை வகித்தார். தோழர்கள் மாரப்பன், அரங்கண்ணல், ஏ எஸ் சி கிருஷ்ணசாமி, நெடுஞ்சேரலாதன், மணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

திரு. வி. க. நினைவு வாசகசாலை

வைத்தீஸ்வரன் கோயில், டிச. 25—

7—12—53-ல், வாசகசாலை திறப்பு விழா நடைபெற்றது. தோழர் எஸ். பக்கிரிசாமி தலைமை வகித்தார். வாசகசாலையின் அவசியம் பற்றி, தலைவர் அவர்களும் தோழர்கள்: செல்வரத்தினம், சேதுராமன், சிவப்பிரகாசம் ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினர்.

வாசகசாலைக்கு 'திரு வி கல்யாணசுந்தரனார் நினைவு வாசகசாலை,' என்று பெயர் சூட்டப்பட்டது. வாசக சாலைக்கு, தோழர்கள்: கு சிவப்பிரகாசம் பிள்ளை தலைவராகவும், எஸ். சேதுராமன் துணைத் தலைவராகவும், என். செல்வரத்தினம் செயலாளராகவும், இரா. கோவிந்தராசன், அ. சுப்ரமண்யம் உதவி செயலாளர்களாகவும் அ. ச. வெ. முருகையன் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மஜீத் படிப்பகம்

காஞ்சிபுரம், நவ. 26—

21—12—53-ல், தோழர் பி. முருகேசன் தலைமையில் உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது அதுபோது, பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

விற்பனை வரி எதிர்ப்புக் கூட்டம்

வாணியம்பாடி, டிச 26—

நகர வியாபாரிகள் சங்க சார்பில், 22—12—53-ல், பல கட்ட முறை விற்பனை வரியை எதிர்க்க நகர் பூராவும் பூரண கடை அடைப்பு செய்தனர். அன்று மாலை நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு, தோழர் க. சி. கந்தசாமி தலைமை வகித்தார். வியாபாரிகளுக்கும், பொதுமக்களுக்கும் பெருந் தொல்லை விளைவித்து வரும் விற்பனை வரியை ஒருமுனையில் மட்டும் அரசாங்கம் வசூலிக்க வேண்டிய அவசியத்தைக் குறித்து, தோழர்கள்: வே. ச. விசுவநாதம், எ. கே. தண்டபாணி, டாக்டர் கண்ணபிரான், கே முத்தையா, பி வெங்கடேசன், எம எஸ் [illegible], ஆகியவர்கள் பேசினர். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

'ழ'வின் பெருமை

★

'ஷ' விலிருந்துதான் 'ழ' வந்தது என ஒரு தமிழர் சொல்லிக்கொண்டிருந்தார். தமிழுக்கே உரித்தான 'ழ' வடமொழியினின்றும் வந்தேயிருக்காதென தமிழர் பலர் அவரிடம் கூறினர்கள். ஆனால் அவர் அதை ஏற்கவில்லை.

வடமொழிப் பற்றுள்ள அந்தத் தமிழருக்கு ஒரு பட்டம் கிடைத்தது.

"பாஷாக விசேகர வித்துவான்" என்பதே அப்பட்டம். உடனே பக்கத்தில் இருந்த அன்பர் ஒருவர் 'ஷ' விற்குப் பதிலாக 'ழ' வைப் போட்டு 'பாழாக விசேகர வித்துவான்' என்று வாசித்தார். அத்தமிழர் திடுக்கிட்டார். தாம் செய்த தவறை உணர்ந்து தமிழின் பெருமையை வியந்தார்."

—'த. நா.' 26—12—53.

"தமிழன்" உதயம்

பிப்ரவரி மாதத்திலிருந்து வெளிவர இருக்கும் 'தமிழன்' என்ற மாதம் இருமுறை தமிழ் [illegible] இதழின் ஆசிரியர், பிரசுரர்த்தராக தோழர் மாநிலி, தம்மை, மதுரை அடிஷனல் ஜில்லா மாஜிஸ்திரேட் முன்பு பதிவு செய்து கொண்டார்.

☆

'திராவிடமணி'

4—1—54 அன்று, இலங்கையில் 'திராவிட மணி' எனும் மாதமிரு முறை இதழ் திறப்பு விழா நடைபெறும். ஆசிரியர்: ஏ. இளஞ்செழியன்; இணையாசிரியர்: புதுமைக் [illegible].

"மரகதமணி"

தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களின் புதல்விக்கு தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்களால் 'மரகதமணி' என அழகுமையில் பெயரிடப்பட்டது.

★

'செங்குட்டுவன்'

20—12—53 மாலை மாயூரம் தோழர் சி. காந்தி அவர்களின் ஆண் மகவுக்கு தோழர் மு. கருணாநிதி அவர்களால் 'செங்குட்டுவன்' என்று பெயர் சூட்டப்பெற்றது.

வருந்துகிறோம்

"தூத்துக்குடி தோழர் கே. என். சுப்பையா அவர்களின் தாயார் வெள்ளையம்மாள் தனது 80-வது வயதில் 20-12-53ல், இரவு 7-மணிக்கு காலமானது கேட்டு வருந்துவதுடன், அன்னாருக்கு நகர தி மு. கழக சார்பாக ஆழ்ந்த அநுதாபத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்" என்று துணைச் செயலாளர் எ. இராயப்பன் அறிவிக்கிறார்.

முகவரி மாற்றம்

இசைமுரசு நாகூர் அனிபா, 91, மூர் தெரு, சென்னை-1.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அறிவகம் அச்சகத்தில் அச்சிடப்பெற்றது (18, [illegible] தெரு, [illegible]) வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: [illegible] அண்ணாதுரை, எம். ஏ.